

# 28

# அஜ்னபி – மஹ்ரமி வரையறைகள்

அல்லாஹ் பிற உயிரினங்களை ஆண் - பெண் என சோடி சோடியாகப் படைத்துள்ளது போல் மனித இனத்தையும் படைத்துள்ளான். முதல் மனிதனாக ஆணைப் படைத்த அவன் அவருக்குத் துணையாக ஒரு பெண்ணைப் படைத்தான். அதிலிருந்தே மனித இனத்தில் இவ்விரு பாலாரும் தோற்றம் பெற்றனர். மனிதர்கள் மத்தியில் ஆண் -பெண் தொடர்பாடல் நாகரிகமானதாக இருக்கவேண்டும் என்பது இஸ்லாத்தின் கொள்கை யாகும். ஏனெனில், இவ்விருபாலாருக்குமிடையிலான எதிர்ப்பாற் கவர்ச்சியானது மனிதனின் உணர்வுகளிலும் ஒழுக்கப் பண்புகளிலும் சமூகக் கட்டுக்கோப்பிலும் பெரும் செல்வாக்குச் செலுத்தும் ஒன்றாகும். ஆகவேதான், அதற்கான ஒழுங்குகளை இஸ்லாம் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளது.

ஆரோக்கியமான சமூகம் ஒன்றில் ஆண்-பெண் உறவுகள் சீரானதாக அமைந்திருக்கும். அங்கு பெண்களுக்கான கௌரவமும் பாதுகாப்பும் சிறப்பாகக் காணப்படும். கணவன்-மனைவி, தாய் - பிள்ளை, சகோதரன் - சகோதரி போன்ற உறவுகள் தெளிவான வரையறைகளுக்குள் பேணப்படும். **மஹ்ரமீ** எனும் அறபுப் பதம் திருமண உறவுகள் வைத்துக்கொள்ளத் தடைசெய்யப்பட்டவர்களையும், **அஜ்னபீ** என்ற பதம் திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டவர்களையும் குறிக்கும். இவ்விரு நிலைகளும் முந்திய சமூகங்கள் மத்தியிலும் முஸ்லிமல்லாத ஏனைய சமூகங்கள் மத்தியிலும் கூட காணப்படுகின்றன. ஆயினும், இஸ்லாத்தில் அதன் வகைகளும் வரையறைகளும் விரிவாகவும் ஆழமாகவும் விளக்கப்பட்டுள்ளன.

இது பற்றி ஸூரத்துன் நிஸாவின் இருபத்து மூன்றாம் வசனம் பின்வருமாறு விபரிக்கின்றது: **‘‘உங்கள் தாய்மார்கள், உங்கள் பெண் பிள்ளைகள், உங்கள் சகோதரிகள், உங்கள் தாயின் சகோதரிகள், தந்தையின் சகோதரிகள், சகோதரனின் பெண்பிள்ளைகள், சகோதரியின் பெண் பிள்ளைகள், உங்களுக்குப் பாலூட்டிய**

**தாய்மார், பால்குடி சகோதரிகள், உங்கள் மனைவிமாரின் தாய்மார், உங்கள் பராமரிப்பிலுள்ள உங்கள் மனைவிமாரின் பிள்ளைகள், உங்கள் மகன்மாரின் மனைவிகள், ஒரே நேரத்தில் இரு சகோதரிளைத் திருமணம் செய்வது உங்கள் மீது ஹறாமாக்கப் (தடைசெய்ய) பட்டுள்ளது''. (4:23)**

மேற்கூறப்பட்டுள்ள அல் குர்ஆன் வசனத்திதையும் அதனோடு தொடர்புடைய ஏனைய வசனங்கள் ஹதீஸ்களையும் அடிப்படையாகக் கொண்டு அஜ்னபீ - மஹ்ரமீ உறவுகளை பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்:

| மஹ்ரம் வகைகள் | உறவு முறை | மஹ்ரமிய்ய காலம் |
|---|---|---|
| குடும்ப உறவு | ✸ தாய், பாட்டி<br>✸ மகள், அவரது மகள்<br>✸ சகோதரி (உடன்பிறப்பு, தாய்வழி, தந்தைவழி)<br>✸ தந்தையின் தாயின் சகோதரிகள் | நிரந்தரமானது |
| திருமண உறவு | ✸ மனைவியின் தாய், பாட்டி.<br>✸ மனைவியின் மகள், மகளின் மகள்...<br>✸ தந்தையின் மனைவி, பாட்டனின் மனைவி<br>✸ மகனின் மனைவி, பேரனின் மனைவி | நிரந்தரமானது |
| | ✸ மனைவியின் சகோதரி<br>✸ மனைவியின் தாயின், தந்தையின் சகோதரிகள் | தற்காலிகமானது |
| பால்குடி உறவு | ✸ பால் கொடுத்த தாய், தாயின் தாய்..<br>✸ பால்குடி உறவிலான மகள், மகளின் புதல்வி<br>✸ பால்குடி உறவுகளான சகோதரி (உடன் பிறப்பு, தாய்வழி, தந்தை வழி)<br>✸ பால்குடி உறவு தாயின் சகோதரி, தந்தையின் சகோதரி<br>✸ பால்குடி உறவு சகோதரனின் புதல்வி, சகோதரியின் புதல்வி | நிரந்தரமானது |

ஷரீஆவினால் வரையறுக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட வகையினருள் சிலரை மணமுடிப்பது நிரந்தரமாகவும் வேறு சிலரைத் திருமணம் செய்வது தற்காலிகமாகவும் தடை செய்யப்பட்டுள்ளது. தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டோர் அதற்கான காரணம் இல்லாது போனால் தடையும் நீங்கி விடும்.

மேற்கூறப்பட்ட உறவுமுறைகள் ஓர் ஆணுக்கு தடைசெய்யப்பட்டுள்ளது போன்று அதற்குச் சமாந்தரமான ஆண் தரப்பு உறவுகள் ஒரு பெண்ணுக்கும் தடை செய்யப்பட்டதாகும். அதனடிப்படையில், நிரந்தரமாகத் தடைசெய்யப்பட்டோர் தவிர்ந்த ஏனையோர் மத்தியில் ஒரு பெண் தனது அழகை வெளிப்படுத்துவதோ அவர்களுடன் தனியாக பயணங்களை மேற்கொள்வதோ தடைசெய்யப்பட்டதாகும்.

**எனவே, வரையறைகளைப் பேணி நடந்து ஒழுக்கமான சமூக மொன்றினைக் கட்டியெழுப்ப நாம் முயற்சிப்போமாக.**

### பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

أَجْنَبِي        مَحْرَمِي        حَرَامٌ

### பயிற்சி

**சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக:**

1. அஜ்னபி என்பது திருமணம் செய்யத் தடைசெய்யப் பட்டோரைக் குறிக்கும். (   )
2. தாயின் சகோதரியைத் திருமணம் செய்வது இஸ்லாத்தில் நிரந்தரமாகத் தடை செய்யப்பட்டுள்ளது. (   )
3. ஒரு ஆண் தனது மனைவியுடன் அவளது சகோதரியையும் திருமணம் செய்து கொள்வது பிழையாகாது. (   )
4. குடும்ப உறவுமுறை மூலம் தடையாவோர் பால்குடி உறவு மூலமும் தடையாவர். (   )
5. ஒரு பெண் தனது சகோதரியின் கணவனுடன் தனியாகப் பயணிப்பதிற் தவறேதுமில்லை. (   )